கனம் இராமநாதபுரம் மாவட்ட குடிமை / அடிவு நீதிபதி அவர்கள் முன்பாக

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364193

1. District : இராமநாதபுரம் PS: உலகம் பரிவு
மாவட்டம் காவல்நிலையம்
Year: 2026 FIR No.: 12/26 Date: 09.09.2026
ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: IPC
Sections பிரிவுகள்: 409, 420, 468, 471

(ii) Act சட்டம்: PC Act 1988 amended in 2018
Sections பிரிவுகள்: 13(1)(a) r/w 13(2)

(iii) Act சட்டம்:
Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to :
குற்ற நிகழ்வு நாள் 2023-2024 நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 09.09.2026 Time : 10.00 மணி
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) ஜெனரல்-II Time : 10.00 மணி
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 2 km தென்மேற்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : OVS palace மஹால் கட்டிடம்
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : ந. ராஜேஸ்வரி (b) Father's/ Husband's Name : நடராஜன்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 02.02.1976 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : காவலர் அயல்பணி (g) Address : ஊரகக் காவல் நிலையம் மற்றும் கண்காணிப்பு மாளிகை
தொழில் முகவரி இராமநாதபுரம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. க. ஜெயக்குமார் த/பெ சந்தியாகு, முன்னாள் வருவாய் ஆய்வாளர், அரசு அதிகாரிகள் மாளிகை நில வருவாய், இராமநாதபுரம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

This case was Registered based on the Findings in PE 122/24/ADW/RM, Hence No delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

-

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

-

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

- Separate Sheet Enclosed -

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed M Kamaraj ..... Rank DSP ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

09.09.2026 - 10.45 hrs

Name: பெயர் N. Rajeswari
Rank: நிலை .....No. எண் .....
Inspector of police
VBC, Ramanathapuram

இராமநாதபுரம் மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 12/2026 சட்ட பிரிவுகள் இந்திய தண்டனை சட்டம் , 409, 420, 468, 471 மற்றும் ஊழல் தடுப்பு சட்டம், 1988 (2018–ஆம் ஆண்டு திருத்தத்தின்படி) பிரிவு 13(1)(a) r/w 13(2) ன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி :–

சமர்ப்பிக்கப்படுகிறது

இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் திரு. மு. குமரேசன் அவர்களால் அனுப்பப்பட்ட விழிப்பு அறிக்கை எண் 06/2024–ன் அடிப்படையில், குற்ற அலுவலர் மீது மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணையின் தொடர்ச்சியாக, இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களின் குறிப்பாணை எண் PE.122/2024/ADW/RM, நாள் 18.10.2024–ன் படி மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணையில் கிடைத்த ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களின் அடிப்படையில், காலம்–7–ல் குறிப்பிடப்பட்டுள்ள குற்ற அலுவலரான திரு. ச. ஜெயக்குமார் மீது குற்ற எண் 12/2026 ஆக, இந்திய தண்டனைச் சட்டம், 1860–ன் பிரிவுகள் 409, 420, 468, 471, மற்றும் ஊழல் தடுப்புச் சட்டம், 1988–ன் பிரிவு 13(1)(a) r/w 13(2) (2018–ஆம் ஆண்டு திருத்தத்தின்படி) ஆகிய சட்டப்பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுகிறது.

இவ்வழக்கில், இராமநாதபுரம் மாவட்டம், அரசு ஆதிதிராவிடர் மாணவர் நல விடுதியில் குற்ற அலுவலரான திரு. ச. ஜெயக்குமார் என்பவர், 2023–2024 ஆம் கல்வியாண்டில் விடுதி காப்பாளராக பணியாற்றியுள்ளார். இவரின் பணியானது மாணவர்களின் வருகைப் பதிவேடு பராமரித்தல், உணவுப் பொருட்கள் மற்றும் இதர அத்தியாவசியப் பொருட்களை அரசின் நடைமுறைகளுக்கு இணங்க கொள்முதல் செய்தல், செலவினக் கணக்குகளைப் பராமரித்தல் ஆகும். மேற்படி குற்ற அலுவலர், ஊழல் தடுப்புச் சட்டம், 1988–ன் பிரிவு 2(c)–ன் படி பொது ஊழியர் (Public Servant) ஆவார்.

இக்குற்றச்சாட்டு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணையில் மொத்தம் 20 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, 11 ஆவணங்கள் சேகரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டது. மாணவர் வருகைப் பதிவேடு, மாதாந்திர உணவுச் செலவினப் பதிவேடு, மாணவர் சேர்க்கைப் பதிவேடு, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலரின் ஆய்வறிக்கைகள் மற்றும் தொடர்புடைய

ஆவணங்கள் அனைத்தும் ஒப்பிட்டு பரிசீலிக்கப்பட்டன. விசாரணையில் OVS Palace கட்டிடத்தில் 150 மாணவர்களுக்கு மேல் தங்கக்கூடிய வசதி இருந்ததும், வருகைப் பதிவேட்டில் ஆஜராகியிருந்த மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்பவே மாதாந்திர உணவுச் செலவினக் கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்ததும் தெரியவந்தது. இருப்பினும், விசாரணையில் உணவுப் பொருட்கள் கொள்முதல் செய்தது தொடர்பாக விடுதி காப்பாளரால் சமர்ப்பிக்கப்பட்ட பில்கள் மற்றும் ஆவணங்களில் முறைகேடுகள் நடைபெற்றிருப்பது கண்டறியப்பட்டது.

விசாரணையின் போது, விடுதிக்கு உணவுப் பொருட்கள் மற்றும் இதர அத்தியாவசியப் பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்ட 1) B.M மினி மார்க்கெட், சிவஞானபுரம் , மகாசக்தி நகர் , இராமநாதபுரம், 2) யாசிர் மளிகை , மார்கெட் பஜார் , இராமநாதபுரம் மற்றும் 3) பெஸ்ட் மணி சிக்கன் , பவுண்ட் கடைத்தெரு , இராமநாதபுரம் 4) S.S மினிமார்க்கெட்,சின்னக்கடை தெரு, வெளிப்பட்டினம், இராமநாதபுரம் ஆகிய கடைகளின் உரிமையாளர்கள் தங்களால் அந்தப் பில்கள் வழங்கப்படவில்லை என்றும், பில்களில் குறிப்பிடப்பட்ட அளவிலான பொருட்கள் தங்களது கடைகளில் இருந்து வழங்கப்படவில்லை என்றும், பில்களில் காணப்படும் கையெழுத்துகள் மற்றும் கையொப்பங்கள் தங்களுடையவை அல்ல என்றும் தெரிவித்துள்ளனர். மேலும், யாசிர் மளிகை , மார்கெட் பஜார் , இராமநாதபுரம் என்ற கடை பில்லில் குறிப்பிடப்பட்ட முகவரியில் செயல்படவில்லை என்பதும் தெரியவருகிறது.

முதற்கட்ட விசாரணையில் குற்ற அலுவலர் விடுதி மாணவர்களுக்கு உணவுப்பொருட்கள் கொள்முதல் செய்தது சம்பந்தமாக ஆவணங்களான விடுதி மாணவர் வருகை பதிவேடு மற்றும், மாதாந்திர உணவு செலவினபட்டியல் பதிவேடு ஆகியவை சரியாக பராமரிக்கப்பட்டு இருந்தாலும், உணவு பொருட்களை கொள்முதல் செய்ய வேண்டிய அரசு நிறுவனங்களில் கொள்முதல் செய்யாமலும், தனியார் கடைகளான 1) B.M. மினி மார்க்கெட், சிவஞானபுரம், மகாசக்தி நகர், இராமநாதபுரம் என்ற முகவரியைக் கொண்ட கடையில் ரூ.1,35,313/-ம், 2) யாசிர் மளிகை, மார்க்கெட் பஜார், இராமநாதபுரம் என்ற முகவரியைக் கொண்ட கடையில் ரூ.2,20,035/-ம், 3)பெஸ்ட் மணி சிக்கன், பவுண்ட் கடைத்தெரு, இராமநாதபுரம் என்ற முகவரியைக் கொண்ட கடையில் ரூ.15,104/-ம் மற்றும் 4) S.S. மினிமார்க்கெட், சின்னக்கடைத் தெரு, வெளிப்பட்டினம், இராமநாதபுரம் என்ற முகவரியைக் கொண்ட கடையில் ரூ.32,791/-ம் ஆக, மொத்தம் ரூ.4,03,243/-க்கு

கொள்முதல் செய்ததாக போலி ஆவணங்களை தயாரித்து அரசுப் பணத்தை முறைகேடாக கையாடல் செய்துள்ளார் என்பதற்கு போதுமான முகாந்திரங்கள் உள்ளன.

ஆகவே, குற்ற அலுவலரான திரு. ச. ஜெயக்குமார், த/பெ. சந்தியாகு, விடுதி காப்பாளர், அரசு ஆதிதிராவிடர் மாணவர் நல விடுதி, இராமநாதபுரம் என்பவர், மாணவர் விடுதிக்கு மளிகைப் பொருட்கள் மற்றும் இதர உணவுப் பொருட்கள் கொள்முதல் செய்த போது போலியான பில்கள் மற்றும் ஆவணங்களை தன்னிச்சையாகத் தயாரித்து, அவற்றை உண்மையானவை எனக் கணக்குகளில் பதிவு செய்து, அரசுப் பணமான ரூ.4,03,243/-ஐ முறைகேடாக கையாடல் செய்து, அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியதன் மூலம், இந்திய தண்டனைச் சட்டம், 1860-ன் பிரிவுகள் 409, 420, 468, 471 மற்றும் ஊழல் தடுப்பு சட்டம், 1988 (2018-ஆம் ஆண்டு திருத்தத்தின்படி) பிரிவு 13(1)(a) r/w 13(2) ன் கீழ் தண்டனைக்குரிய குற்றங்களைப் புரிந்துள்ளார் என்று தெரியவருவதால், மேற்கண்ட சட்டப்பிரிவுகளின் கீழ் அவர் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கையின் அசல் நகல், இராமநாதபுரம் மாவட்ட முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

9.9.26

காவல் ஆய்வாளர்
ஊரல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு
இராமநாதபுரம்.